132/2002

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

நவம்பர் 8, 2000

தொகுதி 104

எண் 5

V2;11,31 P00
P00.109.3
[illegible]

வெளியீடு 14-3-2001 Issued 14-3-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, நவம்பர் 8, 2000 – தொகுதி 109 – எண் 3

**Wednesday the 8th November, 2000 – Volume 109 – No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] **[Price Rs. 3.00**

D
V211,31 P00
P00.109.3
222788

**8–11–2000**

**உள்ளடக்கம்**

| | பக்கங்கள் |
|---|---|
| 1. **அறிவிப்பு——** | |
| பேரவை அலுவல் மாற்றம் | 491 |
| 2. **இரங்கல் தீர்மானம்——** | |
| முன்னாள் தமிழக அமைச்சரும், மத்திய அமைச்சரும், மராட்டிய மாநில ஆளுநருமான திரு. சி. சுப்பிரமணியம் மறைவு | 492 - 516 |
| * மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 492 - 494 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 494 - 497 |
| * திரு. கே. சுப்பராயன் | 498 - 499 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 500 |
| திரு. ஜி.கே. மணி | 501 - 502 |
| திரு. ம. அப்துல் லத்திப் | 502 - 505 |
| * திரு. லா. சந்தானம் | 506 - 507 |
| * திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 507 - 508 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 508 - 509 |
| திரு. சி. வேலாயுதன் | 509 - 510 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 510 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 510 - 512 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 512 - 516 |
| · **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 516 - 520 |

53-402—1

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 23, விக்கிரம — திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 நவம்பர் 8, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்"

தெய்வத்துக்கென எத்தனையோ அருங்குணங்கள் கூறப்படுகின்றன. உலகில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன், வானில் வாழ்வதாகச் சொல்லப்படும் தெய்வத்துக்கு இணையாக வைத்து மதிக்கப்படுவான்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. அறிவிப்பு

### பேரவை அலுவல் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையில், இன்று (8-11-2000) எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த வினாக்கள்-விடைகள் மற்றும் 2000-2001 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலுரை, மானியக் கோரிக்கை மீதான வாக்கெடுப்பு, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல், ஆய்வு செய்தல் ஆகியவை, 13-11-2000 அன்று (திங்கட்கிழமை) பேரவையில் எடுத்துக்கொள்ளப்படும்.

[2000 நவம்பர் 8

## 2. இரங்கல் தீர்மானம்

### முன்னாள் தமிழக அமைச்சரும், மத்திய அமைச்சரும், மராட்டிய மாநில ஆளுநருமான திரு. சி. சுப்பிரமணியம் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்னாள் தமிழக அமைச்சரும், மத்திய அமைச்சரும், மாநில ஆளுநரும், இந்தியாவிலேயே மிகச் சிறந்த விருதான பாரத ரத்னா விருது பெற்ற விடுதலைப் போராட்ட வீரருமான பெரியவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், நேற்றையதினம் மரணம் அடைந்தார் என்ற செய்தியை வருத்தத்துடன் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மறைந்த பெரியவருக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்து, மற்ற கட்சித் தலைவர்கள், அதற்குப் பிறகு பேசுவார்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரங்கல் தீர்மானம்:

"இந்தியத் திருநாட்டின் மூத்த தலைவர்களில் ஒருவரும், தேச விடுதலைக்காக மாணவப் பருவத்திலேயே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவரும், நீண்ட நெடிய அரசியல் அனுபவம் கொண்டவரும், 1946-52 ஆம் ஆண்டுகளில் அரசியல் நிர்ணய சபை மற்றும் இடைக்கால நாடாளுமன்றத்தில் உறுப்பினரும், 1952-62 ஆம் ஆண்டுகளில் தமிழக அமைச்சராகவும், பேரவை முன்னவராக விளங்கியவரும், 1962-67, 1971-77, 1979 ஆம் ஆண்டுகளில் மத்திய அமைச்சராகவும், 1990-1993 ஆம் ஆண்டுகளில் மராட்டிய மாநில ஆளுநராகவும் பொறுப்பேற்றிருந்தவரும், பொது வாழ்க்கையில் நேர்மை, நன்னெறிச் சான்றாண்மை ஆகிய நற்பண்புகளுக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தவரும், பாரதிய வித்யா பவன் என்ற புகழ்மிக்க இந்தியப் பண்பாடு நிறுவனத்தின் தலைவராகவும், பாரதத்தின் மிக உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது பெற்றவரும், இந்தியாவின் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவருமான திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், 7-11-2000 அன்று தன்னுடைய 90-வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து, [illegible] பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் [illegible]மும் கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் அவர்தம்



2000 நவம்பர் 8] [பேராசிரியர் க. அன்பழகன்]

குடும்பத்தினர்க்கு, இப்பேரவை தன்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், இளமை முதல் தேசிய உணர்வு, தமிழ்ப் பற்று, சீர்திருத்த ஆர்வம் ஆகிய இந்த உணர்வுகளைக் கொண்டவராகவும், விடுதலைப் போராட்டத்தில் ஆர்வத்தோடு ஈடுபட்டு, பலமுறை சிறை தண்டனை பெற்றவராகவும், உத்தமர் காந்தியடிகள், மூதறிஞர் இராஜாஜி, பண்டித நேரு, காமராஜர் போன்ற தலைவர்களிடத்திலே நெருக்கம் கொண்டு, சிறந்த முறையில் அமைச்சராகவும் விளங்கி, அரும்பணி ஆற்றியவர். அவர், தமிழகத்திலே அமைச்சராக இருந்த காலத்தில், எதிர்க்கட்சி வரிசையில் நாங்கள் — நானும் கலைஞர் போன்ற மற்ற நண்பர்களும் -- இருந்துள்ளோம்.

*முற்பகல் 9-35*

அந்த நாளில் எதிர்க்கட்சியினர் எடுத்து வைக்கிற வாதங்களுக்கு சி.எஸ். அவர்கள் பல்வேறு வகையில் விளக்கங்கள் சொல்லி, நியாயத்தை நிலைநாட்டுவதிலே மிகுந்த ஆர்வத்தோடு அந்த உணர்வை வெளிப்படுத்தியவர்கள். இருந்தாலும் பொதுநல நோக்கத்தில் அனைத்துக் கட்சியினரிடத்திலும் மிகுந்த நல்ல எண்ணத்தோடு பழகி, அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றவர்கள்.

மாநில அரசிலே அவர்கள் அமைச்சராக இருந்த காலத்திலே, கல்வித் துறையிலே பல திருத்தங்களை, சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். குழந்தைகளுக்கான மதிய உணவு திட்டத்தைப் பரவலாக்குவதில் அவர் முன்நின்றார். கல்வியிலே நல்ல முறையிலே தமிழ் இடம்பெற வேண்டுமென்று அதற்கான தமிழ் வளர்ச்சிக் குழுவை உருவாக்கி, அதன்மூலமாகவும் அவர் பணியாற்றினார். மத்திய அரசில் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் மிகத் திறமையான நிதி அமைச்சர் எனப் பாராட்டப்பட்டார். நாட்டு மக்களுடைய பசி அடியோடு நீக்கப்பட வேண்டுமென்றால், உணவு உற்பத்தியிலே மகத்தான மாற்றம் காணவேண்டுமென்று வெண்மைப் புரட்சியை அகில இந்திய அளவிலே பல மாநிலங்களிலேயும் இடம்பெறச் செய்த பெருமை அவருக்கு உண்டு. நிர்வாகத்திலே மிகத் திறமையாக செயல்பட்டவர் என்று அனைவராலும் பாராட்டப்பட்டவர்.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2000 நவம்பர் 8

*1965* ஆம் ஆண்டு இந்தி ஆட்சிமொழி திணிப்பு காரணமாக தமிழ்நாட்டிலே மாணவர்களிடத்திலே ஒரு பெரும் போராட்டம் உருவானபோது, ஆங்கில மொழி நீக்கப்பட்டுவிடும், அந்த இடத்தில் இந்தி அமர்ந்துவிடும் என்ற அச்சம் ஏற்பட்டபோது, சி.எஸ். அவர்களும், அவர்களோடு அன்றைக்கு அமைச்சராக இருந்த திரு. ஒ.வி. அளகேசன் அவர்களும் மத்திய அமைச்சர் பொறுப்பிலேயிருந்து இராஜிநாமா செய்து, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வைப் பிரதிபலித்து, மத்திய தலைவர்கள், நம்முடைய, தமிழ் மக்களுடைய உணர்வைப் புரிந்துகொள்ளும்படியாகச் செய்தனர். அதற்குப் பின்னர் பண்டித நேரு அவர்கள், இந்தி மொழி பேசாத மக்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் நீடிக்கும் என்ற ஒரு உறுதிமொழியைத் தந்த நிலையில், திரும்ப அமைச்சர் பொறுப்பை ஏற்றுச் செயல்பட்டவர்கள். அவருடைய தொண்டிற்காக பாரத ரத்னா விருது வழங்கப்பட்டுப் பெருமைப்படுத்தப்பட்டவர்.

அரசியலில் நேர்மை, நாணயம், உண்மை ஆகியவை இருக்க வேண்டுமென்று எண்ணியவராகத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர். காங்கிரஸ் கட்சியின் தலைவராக, அகில இந்தியத் தலைவராக, மாநிலத் தலைவராக எல்லாம் விளங்கினார்கள். நாட்டிற்கு நன்மை செய்வதற்காக, கட்சிகளுக்கு அப்பாற்பட்டு ஒரு பொதுநலத் தொண்டராக தன்னை ஆக்கிக் கொண்டு, கடந்த *20* ஆண்டு காலம் அல்லது *15* ஆண்டு காலத்திற்கு மேலாக சமூகத்திற்குத் தேவையான தகுந்த அறிவுரைகளை, நீதி, நியாயங்களை எடுத்து வைத்து, அவ்வப்போது அறிவுறுத்தி வந்தவர். அவருடைய மறைவு தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே ஒரு இழப்பு. தமிழர்களில் பெருமைக்குரிய ஒரு பெருமகனாகத் திகழ்ந்த சி.எஸ். அவர்களை இழந்த நிலையில் அவருடைய மறைவுக்காக என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத ரத்னா சி. சுப்பிரமணியம் அவர்கள் நேற்று நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள். அவர்கள் இந்த நாட்டில்,



*2000* நவம்பர் *8*] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

தமிழகம் மட்டுமல்ல, அகில இந்தியாவிலேயும் ஒரு புகழ்பெற்ற தலைவராக விளங்கினார் என்பதை நம்முடைய பேராசிரியர் அவர்கள் தன்னுடைய பேச்சிலே, அவருடைய தீர்மானத்திலே இங்கே விரிவாக, விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

சி.எஸ். அவர்கள் தன்னுடைய *24* ஆம் வயதில் முதன்முதலாக காந்தியடிகளுக்குத் தொண்டுழியம் செய்கின்ற ஒரு ஊழியராகத் தன்னுடைய அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார்கள். காந்தியடிகள் கோயம்புத்தூருக்கு வந்த நேரத்தில் அவரோடு உடன் இருந்து அவருக்கு என்னென்ன பணிவிடைகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்ய வேண்டுமென்று அன்றைய காங்கிரஸ் உத்தரவிட்டதன் காரணமாக சி.எஸ். அவர்கள் காந்தியடிகளோடு தொடர்ந்து *4* தினங்கள் உடன் இருந்த வரலாற்றை அவர்களே எழுதியிருக்கிறார்கள்.

*முற்பகல் 9-40*

அதிலிருந்து அவருடைய அரசியல் வாழ்வு தொடங்கி, ஒரு சிறந்த வழக்கறிஞராக இருந்தாலும்கூட, தன்னுடைய வழக்கறிஞர் வேலையை விட்டுவிட்டு, இந்த நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்கின்ற ஒரே காரணத்திற்காகத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்த அருமையான தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள். அரசியல் நிர்ணய சபையில் இளம் வயதிலேயே உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த நாட்டினுடைய அரசியல் சட்டத்தை தெளிவாக, இன்றும் யாரும் அசைக்க முடியாத அளவிற்கு உருவாக்குவதில் பெரும் பங்கு கொண்டவர் நம்முடைய சி. சுப்பிரமணியம் அவர்கள். அதோடு தமிழகத்தில் இராஜாஜி அவர்களுடைய தலைமையிலே அமைச்சராக இருந்து, அதன்பிறகு தலைவர் காமராஜர் அவர்கள் இந்த நாட்டில் முதலமைச்சர் பதவிக்குப் போட்டி போட்ட நேரத்தில், அவரை எதிர்த்துப் போட்டியிட்டாலும்கூட, அதன்பிறகு அவருடைய அமைச்சரவையிலேயே சேர்ந்து இந்த நாட்டில் என்னென்ன நல்ல காரியங்கள் நடந்தனவோ அத்தனையிலேயும் தன்னுடைய முத்திரையைக் குத்துகின்ற அளவிற்கு சிறப்பான முறையில், கல்வியமைச்சராக, நிதியமைச்சராகப் பணியாற்றிய பெருமை படைத்தவர் நம்முடைய சி. சுப்பிரமணியம் அவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, நம்முடைய பேராசிரியர் அவர்கள்

சொல்லியதுபோல தமிழுக்காகவே வாழ்ந்த ஒரு உத்தமத் தலைவர் என்று சொன்னால் அது மிகையாகாது. 1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் தேதி இதே அவையில் தமிழ் ஆட்சி மொழியைக் கொண்டு வந்த பெருமை சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு உண்டு. அப்போது இதே அவையில் 'நான் தமிழனாகப் பிறந்த பெரும் பாக்கியத்தை இன்று பெற்றுவிட்டேன், தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்த ஒரு பெரிய பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது' என்று மிகப் பெருமையோடு அவர்கள் பேசிய பேச்சு இன்றும் நம்முடைய மனதிலே நிற்கின்ற அளவிற்கு சிறப்பான முறையிலே தமிழ் ஆட்சி மொழியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்தச் சட்டமன்றத்தில் கடைசியாக 1962 ஆம் ஆண்டு ஒரு பட்ஜெட் போட்டார்கள். அப்போது அவர் என்ன சொல்லிவிட்டுச் சென்றார் என்றால் -- அதன்பிறகு அவர் பாராளுமன்றத்திற்குச் சென்றுவிட்டார். 1962-ல் சட்டமன்றத்தில் பட்ஜெட் போடுகின்றபொழுது, அவர் முதன்முதலாக தமிழிலேயே அந்த வரவு-செலவு அறிக்கையை சமர்ப்பித்துவிட்டு, '100 கோடி ரூபாய்க்கு என்னால் பட்ஜெட் போட முடியாத அளவிற்கு இந்த நாட்டில் வருமானம் இல்லாமல் போய்விட்டதே என்ற வருத்தத்தோடு இந்த நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்' என்றுகூட அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அநேகமாக, 95, 96 கோடி ரூபாய்க்குத்தான் அந்த பட்ஜெட்டை அவர்கள் போட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அப்படி தமிழிலேயே நிதிநிலை அறிக்கையைக் கொண்டு வந்த பெருமை நம்முடைய சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு உண்டு.

நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரை, அவர் விவசாயத் துறை அமைச்சராக வந்தவுடன் அப்போதெல்லாம் இந்த நாடு கடுமையான பஞ்சத்திலே வாடிக் கொண்டிருந்த நேரம். அமெரிக்காவிடம் கையேந்தி நின்று, கோதுமைக்காக, அரிசிக்காகக் காத்திருந்த நேரத்தில், வேளாண்மைத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் வேளாண் துறையில் இருக்கின்ற எம்.எஸ். சுவாமிநாதன் போன்ற பெரிய விஞ்ஞானிகளையெல்லாம் அழைத்துப் பேசி, இந்த நாடு எவ்வளவு காலத்திற்கு வெளிநாட்டிடம் கையேந்தி நிற்க வேண்டும், விவசாய விஞ்ஞானிகளாகிய நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார். அப்போது அவர்கள் சொன்னார்கள், எங்களுக்காக முடிவு எடுக்கின்ற அதிகாரத்தை எங்களிடம் கொடுங்கள், நாங்கள் இந்த விவசாய நாட்டை ஒரு பசுமைப் புரட்சி நாடாக





மாற்றித் தருகிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். அதன் அடிப்படையில், அன்றைய பாரதப் பிரதமர் அவர்களிடம் அவர் பேசி, வேளாண் துறையில் விவசாய விஞ்ஞானிகளை நியமித்த பெருமை நம்முடைய சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு உண்டு. அதன் காரணமாக உலகத்தில் எங்கெங்கே சிறப்பான முறையில் வீரிய விதைகள் இருக்கின்றனவோ அத்தனையையும் கொண்டு வந்து இந்தியாவில் சேர்த்து, வெகுவிரைவில் ஒரு பசுமைப் புரட்சியை உண்டாக்கி, இந்தியா ஒரு தன்னிறைவு பெற்ற நாடு என்கின்ற பெருமையைப் படைத்தவர் நம்முடைய சி. சுப்பிரமணியம் அவர்கள்.

1967 ஆம் ஆண்டு அவர் தேர்தலிலே தோற்றுவிட்ட பிறகு, அவர் அன்னை இந்திராகாந்தியிடம் விடுத்த ஒரே கோரிக்கை--'நான் இருந்தபொழுது வேளாண் துறையிலே என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்தேனோ, அவற்றைத் தயவுசெய்து நீங்கள் மாற்றிவிடாதீர்கள், தொடர்ந்து அவற்றையே செயல்படுத்துமாறு செய்யுங்கள்' என்று கேட்டதோடு, அன்றைய விவசாயத் துறையில் அமைச்சராக இருந்த ஜெகஜீவன்ராம் அவர்களிடமும் நேரில் சென்று கேட்டார் என்ற வரலாறு உண்டு. இந்த நாட்டுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சி. சுப்பிரமணியம் அவர்கள் அதன்பிறகு, இந்தியப் புகழ்பெற்ற நிதியமைச்சராக இருந்து, அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்து, 1980-வது ஆண்டுக்குப் பிறகு, முழுமையாக ஒரு பொதுநல ஊழியராக இருந்து, நாள்தோறும் நாட்டில் நடக்கின்ற பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச்சொல்லி, இந்த நாட்டில் ஒழுக்கம், நேர்மை, நாணயம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட அந்த மாபெரும் தலைவர், காந்தியடிகளுடைய உண்மை வாரிசு இந்தத் தமிழகத்தை உருவாக்கிய பெருந்தலைவர், அருமைத் தலைவர் காமராஜருடைய உண்மையான நண்பர் இன்று மறைந்துவிட்டார்கள். இந்தத் தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே ஒரு பெரிய துணையாக நின்ற அந்த மாபெரும் தலைவர் மறைவால் வாடுகின்ற அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய இரங்கலைத் தெரிவித்து உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள இரங்கல் தீர்மானத்தின்மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை இணைத்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மரணம் மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்று. அதுவும் பழுத்த நிலையில் மரணம் ஆச்சரியமான ஒரு விஷயம் அல்ல. ஆனால் ஏதோ பத்தோடு பதினொன்று, அத்தோடு இது ஒன்று என்ற ஒரு செய்தியாக இல்லாமல், 70 ஆண்டுகால மதிப்புமிக்க திறமையையும், பிற ஆற்றல்களையும் ஒருங்கே சேமிக்கப்பட்ட அனுபவம் நம்மிடமிருந்து இன்றைக்குப் பிரிந்திருப்பது வேதனைக்குரியது ஆகும். கடந்த 70 ஆண்டுகால அனுபவ ஞானத்தில் நிகழ்கால பல்வேறு பிரச்சினைகளுக்கு வழிகாட்டுவதற்குரிய அவசியமும், தேவையும் அதிகரித்துள்ள நிலையில் அவரது மரணம் உண்மையிலேயே ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். தேசிய விடுதலை இயக்கம் இந்தியாவிற்கு மதிப்புமிக்க பல மனிதர்களை உருவாக்கித் தந்திருக்கிறது. பெருமதிப்பிற்குரிய சி.எஸ். போன்ற மகத்தான தேச பக்தர்களை, வெறும் வார்த்தைகளில் அல்லாமல் வாழ்க்கையிலேயே தேச பக்தர்களாக வாழ்ந்த அந்த மாமனிதர்கள் பலரை தேசிய விடுதலை இயக்கம் உருவாக்கியிருக்கிறது. அந்த அற்புத இயந்திரத்தில் உருவான மதிப்புமிக்க மனிதர்களில் ஒருவர்தான் மறைந்த சி.எஸ். அவர்கள் ஆவார்கள். அவரது மரணத்தை, இழப்பை நினைக்கிறபோது எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. நிகழ்காலத்தில் அரசியல் நாகரீகமும், பண்பாடுகளும் சுருங்கி வருகிற நிலையில் மிக உயர்ந்த பண்பாட்டுப் பெட்டகமாக அவர் வாழ்ந்தார் என்பதற்கு இந்தப் பேரவையிலேயே பல்வேறு அரிய ஆதாரங்களை ஆவணங்களாக நம்முடைய மதிப்புமிக்க சி.எஸ். அவர்கள் பதித்திருக்கிறார்கள்.

கடந்த 1954 ஆம் ஆண்டு அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பெருமதிப்பிற்குரிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அவரது அமைச்சரவையின்மீது நம்பிக்கை கோரும் நம்பிக்கைத் தீர்மானத்தை முன்மொழிந்து அதன்மீது விவாதம் நடைபெற்றபோது, அன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த பெருமதிப்பிற்குரிய மறைந்த தோழர் பி. இராமமூர்த்தி அவர்கள் தான் இராஜாஜி அமைச்சரவைக்கு எதிராக அடுக்கடுக்கான





பல வாதங்களை முன் வைத்தார்கள். அன்றைக்கு அவை முன்னவராக இருந்து, அந்த வாதங்களை எதிர் கொண்டவர் மறைந்த சி.எஸ். அவர்கள். அன்றைய காங்கிரஸ் ஆட்சியின்மீது, குறிப்பாக இராஜாஜியினுடைய தலைமையின்மீது மிகக் கடுமையான தாக்குதல்களை அரசியல் ரீதியாகவும், ஆதாரப்பூர்வமாகவும் அன்றைக்கு தோழர் பி. இராமமூர்த்தி அவர்கள் இந்தப் பேரவையிலே முன்வைத்தபோது அதை மறுத்து, எதிர்த்து பல்வேறு விஷயங்களை சி.எஸ். அவர்களும் முன்வைத்தார்கள். இந்த விஷயத்தை தன்னுடைய வாழ்க்கை வரலாற்றில் 'திருப்புமுனை' என்று எழுதிய அவருடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பில் மறவாது குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் மிகுந்த அரசியல் பண்பாட்டோடு 1954 ஆம் ஆண்டு இராஜாஜிக்கு எதிராக நடந்த அந்த விவாதத்தைக் குறிப்பிட்டு எழுதிவிட்டு, 'மறக்கமுடியாத மிகச் சிறந்த பேச்சு' என்று தலைப்பிட்டு தோழர் பி. இராமமூர்த்தி அவர்களின் முழுப் பேச்சையும் அவருடைய வரலாற்றிலே எடுத்து குறிப்பிட்டிருக்கிறார்கள். தான் அங்கம் பெற்ற ஒரு அரசியல் கட்சிக்கு எதிராக, தான் மிகுந்த மதிப்போடு நேசித்த இராஜாஜிக்கு எதிராக, கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாக தோழர் இராமமூர்த்தி அவர்கள் முன்வைத்த அந்த வாதங்களை தன்னுடைய வாழ்க்கைக் குறிப்பிலே மறவாது விரிவாகக் குறிப்பிட்டிருப்பது என்பது திறமையும், தகுதியும், நேர்மையும் எங்கிருந்தாலும் அவற்றைப் பாராட்டுகிற மன வளம் சி.எஸ். அவர்களுக்கு இருந்தது என்பதைக் காட்டுகிறது. சி.எஸ். அவர்களிடமிருந்த மனவளமென்பது இந்தியப் பண்பாட்டின் இயல்பான கூறாகும். அந்த இந்தியப் பண்பாட்டின் இயல்பான கூறாக வாழ்ந்த மதிப்பிற்குரிய சி.எஸ். அவர்களுக்கு நாம் செலுத்துகிற அஞ்சலி, நிலைக்க வேண்டிய பழைய மரபுகளில் ஜீவனுள்ள அந்த மரபுகள் நிகழ்காலத் தேவைகளுக்கு முன்எடுத்துச் செல்வதுதான் மிகச் சிறந்த அஞ்சலியாகும். அதுவும் அரசியல் வாழ்வில் நேர்மை அருகிக் கொண்டிருக்கிற நிலைமையில், நேர்மையாளர்கள் பெரிதும் சோதனைக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிற இன்றைய நிலையில் நேர்மையான வாழ்க்கையை நீண்டகாலம் வாழ்ந்து வழிகாட்டிய பெருமதிப்பிற்குரிய சி.எஸ். அவர்களுக்கு நாம் செலுத்துகிற அஞ்சலி, அவர் வாழ்ந்த அந்த நேர்மையான வழிமுறைகளில் நம்முடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பாடுபடுவதுதான் மிகச் சிறந்த அஞ்சலியாக இருக்கும் என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்து அமைகிறேன்.

*முற்பகல் 9-50*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, அனைவராலும் சி.எஸ். என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு. சுப்பிரமணியம் அவர்கள் நேற்றைக்கு மரணமடைந்துவிட்டார்கள். அவர் தன்னுடைய வாழ்நாள் முழுவதும், தன்னுடைய வாழ்க்கையைப் பொதுச் சேவைக்காக அர்ப்பணித்தவர். அவர், அவருடைய காலத்தில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்காகப் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திக் காட்டியவர். 'பாரத ரத்னா' பட்டம் பெற்றவர்கள். மஹாராஷ்டிராவினுடைய கவர்னராகப் பணியாற்றியிருக்கின்றார்கள். அவர்கள் தமிழக சட்டமன்றத்திலே 10 ஆண்டுகள் அமைச்சராகவும், மத்தியிலே இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், சரண்சிங், நேரு ஆகியோர்களுடைய ஆட்சிக்காலத்திலேயெல்லாம் அமைச்சராகவும் இருந்து மிகச்சிறந்த பணியாற்றியிருக்கின்றார்கள். அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆதரித்த கலப்புத் திருமணத்தை ஆதரித்து, தன்னுடைய வாழ்க்கையிலே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள். அரசியல் நிர்ணய சபையிலே உறுப்பினராக இருந்தவர்கள். இன்றைக்கு உலகத்திலேயே கொடிகட்டிப் பறந்துகொண்டிருக்கின்ற 'I.T.I.' சென்னையிலே உருவாவதற்கு முதற்காரணமாக அவர்கள் விளங்கியிருக்கின்றார்கள். அவர்,'Technocrat'—அதாவது, தொழில் நுட்ப வல்லுனரைத் தன்னுடைய உதவியாளராகத் தைரியமாக அந்தக் காலத்திலேயே நியமித்தவர். இன்றைக்கு 'Information Technology' என்று சொல்லப்படுகின்ற நம்முடைய தொழில்நுட்பம் வளர்வதற்கு அவர் கடைசிவரை தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். அவர் தன்னுடைய 90 வயது வரை, இவ்வளவு காலமும் இளமையாக இருந்து தன்னுடைய வாழ்க்கையைச் சிறந்த முறையிலே அரசியலுக்கு அர்ப்பணித்தவர். அவர் இன்று நம்மிடையே இல்லை. அவருடைய பிரிவால் வாடும் அவருடைய குடும்பத்திற்கு எங்களுடைய கட்சியின் சார்பாகவும், எனது சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இரங்கலைத் தெரிவிக்கிறேன். மறைந்த பெரியவர் மரியாதைக்குரிய 'சி.எஸ்.' என்று எல்லோராலும் பாராட்டக்கூடிய அவருடைய இழப்பு என்பது தமிழ்நாட்டிற்கு மாத்திரமல்லாமல் இந்தியத் துணைக் கண்டத்திற்கே ஒரு பேரிழப்பு என்று சொல்லக்கூடிய வகையில் இன்று அமைந்துவிட்டது.

'தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

என்ற அந்த வள்ளுவரின் வாக்கிற்கிணங்க நாட்டிலே பல தலைவர்கள் தோன்றி மறைந்தாலும்கூட புகழோடு மறைந்திருக்கக் கூடிய சி.எஸ். அவர்கள் தனக்கெனத் தனி முத்திரையைப் பதித்த பெருமை, இந்தியத் திருநாட்டிலே தமிழ்நாட்டுக்கு உயர்ந்த இடத்தை வழங்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிச் சொல்கின்ற நேரத்திலே தமிழ்நாட்டிலே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்தியாவினுடைய மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருதைப் பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவர். அதே நேரத்திலே, தன்னுடைய இளமைக் காலத்திலே 1932-லே விடுதலைப் போராட்டத்திலே 'உப்பு சத்தியாக்கிரகம்' தோன்றிய காலத்திலே அந்த இயக்கத்திலே தன்னை அர்ப்பணித்து 'வெள்ளையனே வெளியேறு' என்ற அந்த கோஷத்தை முன் வைத்து அந்தப் போராட்டத்திலே பங்கு பெற்று, பலமுறை சிறை சென்ற இநதியாவினுடைய மிகப்பெரிய தலைவர்களுள் ஒருவராக விளங்கினார். அதே நேரத்திலே, தமிழ் மொழி காக்கப்பட வேண்டும், தன்னுடைய தாய் மொழி தமிழ் எந்தவகையிலும் அழிந்துவிடக்கூடாது, முன்மாதிரியாக அது நம்மோடு இருக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய வகையிலே அதற்கும் அரும்பாடுபட்ட பெருமை தமிழக வரலாற்றிலே நிலைத்து நின்றுகொண்டிருக்கிறது.

*முற்பகல் 9-55*

**1956-ல்** டிசம்பர் மாதத்திலே இதே மாமன்றத்திலே தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது அவர் சொன்ன

வார்த்தைகள்--'இன்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் வாயிலாக நான் பிறவிப் பயனை அடைந்துவிட்டேன், வாழ்க தமிழ், வாழ்க தமிழ், வாழ்க தமிழ்' என்று முழக்கமிட்டு அந்தச் சட்டத்தை உருவாக்கியது இந்த நேரத்திலே நாம் பெருமைபடக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது. இப்படித் தன்னுடைய வாழ்க்கையை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக, பொது வாழ்க்கையில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லி அரசியல் மனமாச்சரியங்களை எல்லாம் மறந்து, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய உழைக்கக்கூடிய மக்களுக்குப் பாடுபட வேண்டும், வறுமை அகற்றப்பட வேண்டும் என்பதற்காக பசுமைப் புரட்சியை உண்டாக்கிய பெருமைக்குரியவர். இப்படி பெரியவர் சி.எஸ். அவர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்று சொன்னால் இன்னும் நீண்டநேரம் சொல்லிக் கொண்டிருக்க முடியும். அந்த வகையிலே மிகுந்த பெருமைக்கும், புகழுக்கும் சொந்தக்காரராக இருக்கக்கூடிய பெரியவர் சி.எஸ். அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு மிகுந்த வேதனையும், பேரிழப்புமாகும் என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படி வாய் அளவிலே நாம் எவ்வளவுதான் பேசிக் கொண்டிருந்தாலும்கூட, அவருடைய புகழுக்கு, அவருடைய வாழ்க்கைக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று சொன்னால், தமிழர்களாகிய நாம் அவருடைய வழியைப் பின்பற்ற வேண்டும், அவர் சொன்ன கருத்துகளை, பசுமைப் புரட்சியை, அவர் தமிழுக்கு செய்த தொண்டினை, அவருடைய நாட்டுப் பற்றை, மற்றவர்களைக் காட்டிலும் அவரிடத்திலே இருந்த மிகுந்த அந்த நல்ல பண்புகளை எல்லாம் நாம் ஏற்று அவர் வழியிலே சென்று, அவர் விட்ட பணியினைத் தொடருவதுதான் நம்முடைய தலையாய கடமையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ம. அப்துல் லத்திப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் பேராசிரியர் அவர்கள் முன்மொழிந்து வெளிப்படுத்திய உணர்வுகளோடு நானும் என்னுடைய உணர்வுகளை இணைத்துக்கொள்கிறேன். நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பயனுள்ள, பொருளுள்ள, அருளுள்ள ஒரு நீண்ட வாழ்வு நேற்றையதினம் நிறைவுபெற்றிருக்கிறது. சி.எஸ். அவர்களுடைய





வாழ்க்கையை நாம் ஆழமாகப் பார்த்தால் அந்த வாழ்க்கையில் கை சேதப்படக்கூடிய பகுதி எதுவும் இல்லை. எல்லோரும் பார்த்துப் பாராட்டி பின்பற்றக்கூடிய பகுதி அதிகமாக இருக்கிறது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மிகச் சிறிய வயதிலேயே இந்த நாட்டிற்கு அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது, மிகப் பெரிய தலைவர்களோடு இருந்து, அவரும் நம்முடைய சுதந்திர நாட்டினுடைய ஆட்சி முறை எப்படி இருக்க வேண்டும் என்பதைக் குறித்தும், அந்த ஆட்சி எப்படியெல்லாம் சாதாரணமானவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக அரசமைப்புச் சட்டத்தில் மற்றவர்களோடு அவர் இருந்து பேசிய பேச்சுக்கள் இன்றைக்கும் நம் அனைவருக்கும் வழிகாட்டக்கூடியவைகளாக இருக்கின்றன. பெருந்தலைவர் காமராஜர், டி.டி. கிருஷ்ணமாச்சாரி, சர். எஸ். வரதாச்சாரி, கிருஷ்ணசாமிபாரதி, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் போன்றவர்கள் எல்லாம் இடம்பெற்றிருந்த அந்த அவையில் மிகச் சிறிய வயதில் இளைஞராக அவர் இருந்தபோது, அவரை சி. சுப்பிரமணியம் என்று அழைக்கும் வகையில் காமராஜ் போன்ற பெரியவர்கள் 'சி.சு' எங்கே என்றுதான் கேட்டார்கள். அவ்வளவு சிசு என்ற நிலையிலே இருந்த சுப்பிரமணியம் அவர்கள் பெரியவர்களோடு இருந்து நம்முடைய நாட்டிற்கு நல்லதொரு அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கித் தந்தார்கள். அதிலேயிருந்து அவர்களுடைய பணி தொடர்ந்தது. தமிழ்நாட்டினுடைய அரசியலில், ஆட்சியில் இடம்பெற்று மிகச் சிக்கலான நேரங்களில், இக்கட்டான நேரங்களில் அவர்கள் தங்களுடைய பணியை ஆற்றியிருக்கிறார்கள். இராஜாஜியோடு அவருக்கு ஆத்மீகமான, நெருக்கமான தொடர்பு இருந்தாலும், பெருந்தலைவர் காமராஜருடைய ஆட்சியிலேயே இடம்பெற்று, அவர்கள் காமராஜருக்கும் பெருமை சேர்த்தார்கள் என்பது நமக்கு மகிழ்ச்சிக்குரிய ஒன்று. எங்களுக்கு அவருடைய வாழ்க்கையிலே நாங்கள் எல்லாம் கவரப்பட்ட ஒரு சமயம் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழகத்திலே நடந்து கொண்டிருந்த அந்தச் சூழ்நிலையில் இந்தி எங்கு ஏற்றம் பெற்றுவிடுமோ, தமிழைப் பின்னுக்குத் தள்ளிவிடுமோ என்றெல்லாம் நாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்த அந்த நேரத்தில், சி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழுக்காகக் குரல் கொடுத்து தன்னுடைய பதவியைத் துறந்தார்களே, அது எங்களுடைய உள்ளத்தை மிகவும் கவர்ந்தது என்பது மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே அன்றைக்கு தமிழுக்காக இந்தி ஏகாதிபத்தியம் இங்கே ஏற்படக்கூடாது என்று

[திரு. ம. அப்துல் லத்திப்] [2000 நவம்பர் 8

போராட்டம் நடத்தி சிறைக்குச் சென்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களுடைய நிலை சரியானது என்பதை தன்னுடைய இராஜிநாமாவின் வாயிலாக சி. சுப்பிரமணியம் அவர்கள் வெளிப்படுத்தியது எங்களுக்கெல்லாம் ஆறுதலாக இருந்தது.

*முற்பகல் 10-00*

அவர்கள் மத்திய நிதியமைச்சராக, தமிழகத்தின் நிதியமைச்சராக, மத்தியிலே விவசாயத் துறை அமைச்சராக பசுமைப் புரட்சிக்கு வழிவகுத்தார்கள் என்பதும் உண்மை. அதே நேரத்தில் எம்.எஸ். சுவாமிநாதன் போன்றவர்கள் கோதுமை வீரிய விதைத் திட்டத்திற்கு அடிப்படை அமைத்தார்கள். அந்த முயற்சிக்கு அப்போது அமைச்சராக இருந்து ஆதரவு அளித்தார். அன்றைக்கு நாட்டிலே பெருமை சேர்க்க வேண்டும் என்று அந்த வீரிய விதைத் திட்டத்திற்கு சரியாக உற்சாகம் அளித்தார்கள். அதை விளம்பரப்படுத்தினார்கள் என்பதில் சி. சுப்பிரமணியம் அவர்களுக்குப் பெரும் பங்கு இருந்தது. அந்த வகையில் அவர்கள் பசுமைப் புரட்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தார்கள் என்ற பெருமை இன்றைக்கும் மறைக்க முடியாத ஒன்று. எனவே, அப்பேர்ப்பட்ட அவர்கள், நாங்கள் எல்லாம் படிக்கும்போதுகூட அவர்கள் சில விஷயங்களிலே மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும் இருந்தார்கள். 'Council for National Integration' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதிலே மாணவர்கள் பெரும் பங்குகொள்ள வேண்டும் என்று அவர்கள் பாடுபட்டார்கள். அதிலே அன்றைய இளைஞர்களாக இருந்த பலரை இணைத்து அவர் செயல்பட்டார் என்பது இன்றைக்குக்கூட நினைவுகூரத்தக்க ஒன்று.

தமிழிலே மட்டுமல்ல, ஆங்கிலத்திலேயும் நல்ல புலமை பெற்றவர் சி. சுப்பிரமணியம் அவர்கள். அவர்கள் பேசினால், சில நேரங்களில் ஐ.ஏ.எஸ். ஆபிசர் பேசுவதைப்போலத்தான் இருக்கும். ஓர் அமைச்சர், அரசியல்வாதியாகப் பேசுவதாக எங்களுக்குத் தெரியாது. ஒரு நல்ல ஐ.ஏ.எஸ். ஆபிசர் பேசுவதைப் போல பேசினார். 'Rules and Regulations' என்பதில், விதிமுறைகள் என்பதில் விடாப்பிடியாக அவர்கள் நிலைநிறுத்தித்தான் பேசினார்கள். இம்மியளவுக்குக்கூட அவர் விட்டுக்கொடுக்க மாட்டார். அந்த அளவிற்கு நிர்வாகத்திலே மிக உற்சாகத்தோடும், அதே நேரத்தில் ஆழத்தோடும் செயல்படக்கூடியவர்.



2000 நவம்பர் 8] [திரு. ம. அப்துல் லத்திப்]

கடைசி வரையில் 90-வது வயது வரையிலேயும் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, நாட்டுக்குத் தேவையான பல்வேறு துறைகளில் சி. சுப்பிரமணியம் அவர்கள் தன்னுடைய பங்கை கடைசி மூச்சு வரையில் செலுத்தினார்கள். எந்தவிதமான தடுமாற்றத்திற்கும் அவர் ஆளாகவில்லை. அதே நேரத்தில் அவருடைய கொள்கையில் உறுதியாக இருந்தார் என்பதில் சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு மிகப் பெரிய பெருமை உண்டு. அவர்கள் திடீரென்று நேற்று நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்கள். இந்த அவையிலே, இந்த நாட்டிலே, நம்முடைய அரசியலிலே பெரும் பங்கு கொண்ட சி. சுப்பிரமணியம் அவர்கள் இன்றைக்கு இல்லையென்றாலும், ஒரு நிறைவான வாழ்வு, அருள் உள்ள வாழ்வு, பொருள் உள்ள வாழ்வு பெற்று 90-வது வயதிலே அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள், இறைவனிடத்தில் சென்றுவிட்டார்கள் என்ற நிலையிலே, நம்முடைய துயரம் - இன்றைக்கு நீண்ட வாழ்வு திடீரென்று நிலைகுலையும்போது மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய ஒரு வாழ்வு திடீரென்று சென்றுவிட்டதே, சென்றுவிட்ட இடத்திலேயே நின்று விட்டதே என்ற நிலையில் நாம் மிகுந்த ஆதங்கப்பட்டு அலமலர்ந்து நிற்கிறோம். எனவே, சி. சுப்பிரமணியம் அவர்களுடைய குடும்பத்திற்கு, அவருடைய ஊர் - அவர் பிறந்ததும் அகமீய ஆத்மீகச் சூழ்நிலையிலேதான் பிறந்து வளர்ந்திருக்கிறார். அதுவும் அவருடைய சித்தப்பாவே ஒரு துறவி என்று சொல்லப்படுகிறது. எனவே, அந்த வகையிலே வந்த சி. சுப்பிரமணியம் அவர்கள், (குறுக்கீடு) அவருடைய சித்தப்பா சித்பவானந்தம் அவர்கள் வழியிலே வந்த அவர்கள் அகமீய ஆத்மீகத்தையும் விடாமல், அரசியலிலேயும் உறுதியைக் கடைப்பிடித்து, எந்தச் சூழ்நிலையிலும் தான் மேற்கொண்ட கொள்கையில் இம்மியளவும் மாறுபாடு காணாமல் உறுதியாக வாழ்ந்த சி. சுப்பிரமணியம் அவர்களுடைய வாழ்க்கை நிறைவு பெற்றுள்ளது. அவர்களுக்கு இந்திய தேசிய லீகின் சார்பாக நான் என்னுடைய அஞ்சலியைச் செலுத்தி, அவர்களுடைய குடும்பத்திற்கு என் சார்பாக இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மறைந்த சி. சுப்பிரமணியம் அவர்கள் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்ட வீரராகவும், மத்தியிலே அமைச்சராகவும், மாநிலத்திலே அமைச்சராகவும் இருந்து, பல்வேறு நன்மைகளை இந்த நாட்டிற்கு ஆற்றியவர். அவருக்கும் எங்களது பார்வர்டு பிளாக் இயக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. இங்கு தோழர் சுப்பராயன் அவர்கள் சுட்டிக்காட்டினார்களே, இராஜகோபாலாச்சாரி அவர்கள் தனது மந்திரிசபை மீதான நம்பிக்கைத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்த நேரத்தில் தோழர் பி. இராமமூர்த்தி போன்றவர்கள் எல்லாம் அதற்கு எதிராகப் பேசுகின்ற அந்த நேரத்திலே உரிய பதிலை சி. சுப்பிரமணியம் அவர்கள் அளித்தார்கள் என்று இங்கே குறிப்பிட்டார்களே, அந்த நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வருவதற்கு மூல காரணமாக இருந்த சக்தியே அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்றைக்கு 1952-ல் எங்களது தலைவர் தேவர் அவர்கள், சட்டமன்றத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் போட்டியிட்டு இரண்டு அவைக்கும் வெற்றிபெற்ற நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பினை இராஜிநாமா செய்துவிட்டு இந்த சட்டமன்றத்திலே உறுப்பினராகப் பங்கேற்கிறார்கள். பிறகு நடந்த நாடாளுமன்ற இடைத்தேர்தலிலே காங்கிரஸ் தன்னுடைய வேட்பாளரை நிறுத்துகின்ற நேரத்தில் பார்வர்டு பிளாக் இயக்கமும் தேவர் சார்பிலே ஒரு வேட்பாளரை நிறுத்தி, அந்தத் தேர்தலிலே, மக்கள் மன்றத்திலே வாக்குகளைக் கேட்கின்றபோது, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த இராஜாஜி அவர்கள் இந்தத் தேர்தலிலே காங்கிரஸ் தோல்வியுறுமே யானால், இந்த அரசிடத்திலே மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கை குறைவு என்கின்ற நிலை ஏற்படும் என்ற நிலையை எடுத்துச் சொல்லி, எனவே இந்தத் தேர்தலிலே வெற்றி பெற்றால்தான் மக்கள் காங்கிரஸ் ஆட்சியிலே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை உறுதி செய்ய முடியும் என்று சொல்லி தேர்தல் களத்தைச் சந்தித்த நேரத்திலும், பார்வர்டு பிளாக் இயக்கத்தைச் சார்ந்தவர் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றார்கள். அதன் மூலமாக அன்றைக்கு மக்கள் மன்றத்திலே தோல்வியை காங்கிரஸ் சந்தித்தபோது, அதை தேவர் அவர்கள் சட்டமன்றத்திலே எழுப்பிய நேரத்திலேதான் அன்றைக்கு தேர்தல் தோல்வியை நியாயப்படுத்துவதற்காக நம்பிக்கை வாக்கே சட்டமன்றத்திலே கோரப்பட்டது. தேவர் அவர்களும், இராமமூர்த்தி





போன்றவர்களும் அரசுக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்த நேரத்திலேதான் சி.எஸ். அவர்கள் திறமையாக தனது பதிலை சொன்னார்கள் என்று இப்போது சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதுபோல் எங்கள் இயக்கத்திற்கும்; அவருக்கும் பல்வேறு சூழ்நிலைகளில் மிகுந்த நெருக்கமான உறவு இருந்தது. அப்படிப்பட்ட நல்லவர், இயக்க ரீதியிலே அவர் ஒரு இயக்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர் மேற்கொண்டிருந்த பணியிலே எந்தவிதமான தொய்வும் இல்லாது இந்த நாட்டு மக்களுக்காக தூய்மையோடு, நேர்மையோடு தன்னுடைய செயலை ஆற்றியவர். கல்வியமைச்சராக இருந்தபோது, தமிழகத்திலே இலவசக் கல்வித் திட்டத்தையே கொண்டு வந்த பெருமை சி.எஸ். அவர்களைச் சாரும். அதுபோல, காமராஜர் அவர்களோடு இணைந்து, இலவச மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்த பெருமையும் சுப்பிரமணியம் அவர்களையே சாரும். பசுமைப் புரட்சி போன்ற பல்வேறு நல்ல திட்டங்களை இந்த நாட்டிற்கு அளித்த சுப்பிரமணியம் அவர்களுடைய மறைவு உண்மையிலேயே இந்த இந்திய தேசத்திற்கும் குறிப்பாக தமிழக மக்களுக்கும் பேரிழப்பாகும். எனவே, அவரை இழந்து வாடுகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும், தமிழக மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளம் வயதிலேயே, அதுவும் மாணவனாக இருந்த நேரத்திலேயே அரசியல் வாழ்வில் ஈடுபட்டு ஒரு சிறந்த நிர்வாகி என்ற முறையிலும், சிறந்த பார்லிமெண்ட்டேரியன் என்ற முறையிலும் இன்று இந்த நாட்டில் அரசியல் பொது வாழ்வில் எப்படி நேர்மையும், நாணயமும் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் பல நல்ல கருத்துகளை எடுத்து வைத்தவர். தமிழ்நாட்டினுடைய, அதே போன்று இந்திய நாட்டினுடைய வளர்ச்சிக்காக பல திட்டங்கள் -- பசுமைப் புரட்சித் திட்டம் போன்ற பல திட்டங்கள் -- கல்வி சம்பந்தமாக பல நல்ல நடவடிக்கைகள் எல்லாம் எடுத்த ஒரு மிகப் பெரிய மனிதரை இன்று நாம் இழந்து தவிக்கிறோம்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 நவம்பர் 8

*முற்பகல் 10-10*

அவர் நாட்டுக்காகச் செய்த நல்ல பணிகளை என்றும் நாடு போற்றும், நிச்சயமாக அதைப் பின்பற்றும் என்பதிலே எந்த சந்தேகத்திற்கும் இடமில்லை. அப்படிப்பட்ட ஒரு பெரிய மனிதர் இந்திய விடுதலைப் போராட்ட காலத்திலேயிருந்து அரசியலிலும், பொது வாழ்விலும் பல நல்ல நிலைகளிலே செயலாற்றியதன் காரணமாகத்தான் 'பாரத ரத்னா' என்ற உயர்ந்த விருதை சி.சுப்பிரமணியம் அவர்களுக்குக் கொடுப்பதற்கு இந்த நாடு முடிவு செய்தது. அப்படிப்பட்ட ஓர் உத்தமரை இன்று நாம் இழந்து தவிக்கிறோம். அவருடைய மறைவால் வாடுகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும், அதேபோன்று அவரை ஆதரிக்கின்ற மக்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்து, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வழிமொழிந்துள்ள, மறைந்துவிட்ட மரியாதைக்குரிய திரு. சி.எஸ். அவர்களுடைய இரங்கல் தீர்மானத்திலே எங்களுடைய தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து இங்கே நான் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

மறைந்துவிட்ட மாண்புமிகு திரு. சி.எஸ். அவர்கள், இனத்தால் இந்தியன், மொழியால் தமிழன் என்ற உணர்வுக்குச் சொந்தக்காரராக, இந்தியத் திருநாட்டிலே பல பொறுப்புகளிலே மத்தியிலே அமைச்சராகவும், மாநிலத்தில் பல பொறுப்புகளிலே, குழுக்களிலே தலைவராகவும் இருந்து நல்ல முறையிலே இந்தியத் திருநாட்டினுடைய மக்களுக்கு மட்டுமல்லாது, தமிழகத்தினுடைய மக்களுக்காகவும் சிறந்த முறையிலே பணியாற்றியவர். பாரத ரத்னா விருது பெற்றவர். பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி வறுமையை ஒழிப்பதற்காகப் போராடியவர். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், பெருந்தலைவர் காமராஜர், கண்ணியத்திற்குரிய இராஜாஜி, பெருந்தகை பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர்



2000 நவம்பர் 8] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

ஆகியோரோடு நெருங்கிய தொடர்புகொண்டு தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காகப் பல வகைகளிலே குரல் கொடுத்தவர். நாடாளுமன்றத்திலே கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் தமிழுக்காகக் குரல் கொடுத்தபோது, இந்தியத் திருநாட்டிலே இந்தியை இங்கே திணிக்கவிடாது தமிழன் வாழவேண்டுமென்பதற்காகக் குரல் கொடுத்த முதுபெரும் தலைவர் தன்னுடைய 90-வது வயதிலே இறைவனடியை எய்தியிருக்கிறார். அவரது பிரிவால் வாடும் தமிழக மக்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பில் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்து முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்துவிட்ட பாரத ரத்னா திரு. சி.எஸ். அவர்கள் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த பெயரைப் பெற்றார் என்பது மட்டுமல்ல, பாரத நாட்டிற்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையில் வாழ்ந்த பெரியோர்களுடைய பிரதிநிதித்துவமாகவும் அவருடைய வாழ்க்கை அமைந்திருந்தது. சுதந்திரத்திற்காகப் போராடி சுதந்திரத்தைப் பெற்ற ஒருவர் என்பது மட்டுமல்ல, சுதந்திரம் மறைந்துவிடுமோ என்ற நிலை வந்தபோது - அவசர நிலையின்போது - மிகுந்த உணர்வோடு சுதந்திரத்திற்காகப் போராடினார், அவசர நிலையை எதிர்த்தார் என்பது மட்டுமல்ல, எதிர்த்துப் போராடிய எங்களுடைய இயக்கத்திற்கும் மிகுந்த உறுதுணையாக இருந்தார். 1975 ஆம் ஆண்டு திருச்சி, திருப்பராய்த்துறையில் சித்பவானந்தா சுவாமிகளுடைய பள்ளிக்கூடத்தில் எங்களுடைய இயக்கத்தினுடைய பயிற்சி முகாம் நடத்துவதற்கு, அவசர நிலையிலே கூட எங்களுக்கு ஒத்துழைப்பாக இருந்து, அனுமதி பெற்றுத் தந்து, தேசபக்தியும், தெய்வ பக்தியும், ஒழுக்கமும் தன்னுடைய வாழ்நாளில் எப்போதும் பிரதிபலிக்கக்கூடிய வகையில் வாழ்ந்தவர். அவருடைய வாழ்க்கை, தமிழகத்திற்கு, தமிழ் மக்களுக்கு, அகில பாரத அளவில் மட்டுமல்ல, உலக அளவில் மிகப் பெரிய பெருமை சேர்த்த ஒரு வாழ்க்கையாக இருந்தது என்று சொன்னால், அது மிகையாகாது. மனிதன் எப்படியும் வாழலாம் என்று இல்லாமல், இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்க்கையில் ஒரு நெறிமுறையை அமைத்துக்கொண்டு, அதன்படி வாழ்ந்து காட்டிய ஒரு பெரியவர் தானும் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழவைக்க

வேண்டுமென்ற வகையில் உன்னத வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர். குறிப்பாக, அரசியல்வாதிகளாகிய நம் அனைவருக்கும் நேர்மையும், ஒழுக்கமும் சிக்கனத்தின் மூலம்தான் வரும் என்ற அளவுக்கு வாழ்ந்து காட்டிய பெரியவர். அவருடைய வாழ்க்கையை நாம் அனைவரும் பின்பற்றி, நல்ல அரசியல்வாதியாகி தமிழகத்தை மீண்டும் தலைநிமிரச் செய்யவேண்டும். அதற்குண்டான சூழ்நிலையைப் பெறுவதற்கு அவருடைய வாழ்க்கை வழிகாட்டியாக இருக்கும் என்று சொல்லி, பாரதிய ஜனதா கட்சியின் சார்பில், உன்னத வாழ்க்கையை, இலட்சிய வாழ்க்கையை வாழ்ந்த அவரை இழந்து வாடுகிற அவருடைய குடும்பத்தாருக்கும், தமிழக மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தினையும், இரங்கலையும் பகிர்ந்துகொண்டு அமர்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பழம்பெரும் தேச பக்தரும், தலைசிறந்த நிர்வாகத் திறன் கொண்டவரும், பசுமைப் புரட்சியின் வித்தகருமாகிய பாரத ரத்னா பெரியவர் சிஎஸ். அவர்களின் மறைவுக்கு புதிய தமிழகம் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் வெறும் அரசியல்வாதியாக மட்டுமில்லாமல் ஏறக்குறைய 20 ஆண்டு காலத்திற்கு மேலாக பொது நலத் தொண்டராகவும் பணியாற்றி இன்றைய தலைமுறைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கியவர். அன்னாரின் மறைவால் வாடும் அவருடைய குடும்பத்தாருக்கும், இந்திய மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் மீண்டும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பெரியவர் சி. சுப்பிரமணியம் அவர்கள் பொது வாழ்விற்கு ஓர் இலக்கணமாய், தனி மனித ஒழுக்கம், பொது ஒழுக்கம் இரண்டிலேயும் ஓர் எடுத்துக்காட்டான மனிதராகத் திகழ்ந்து வழிகாட்டியவர். அவருடைய பொது வாழ்வுத் தொண்டின் தொடக்கக் காலத்திலிருந்து தமிழின் மீது அவர் கொண்டிருந்த அளவற்ற அன்பை



வெளிப்படுத்துகின்ற விதத்திலே தமிழ் ஆட்சிமொழியை அமல்படுத்தியதோடு மட்டுமல்லாமல், தமிழக சட்டமன்ற வரலாற்றில் வரவு-செலவுத் திட்ட அறிக்கையை தமிழிலே அளித்த ஒரு பெருமைக்கு உரியவராகவும் அவர் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

1965-லே நடைபெற்ற இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரிலே தமிழக மக்களுடைய மனக் குமுறலுக்கு மதிப்பளித்து தன்னுடைய மத்திய அமைச்சர் பதவியை அவர் இராஜிநாமா செய்ததும் தமிழக மக்களின் மீதும், அவர்கள் பேசுகின்ற மொழியின் மீதும் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை நமக்கெல்லாம் எடுத்துக்காட்டுவதாகத் திகழ்கின்றது.

பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட நாயகராக அவர் இருந்தபோதிலும்கூட, அவருடைய கடைசி காலத்திலே பசுமைப் புரட்சி என்பது வெறும் உற்பத்திப் பெருக்கத்திலே மட்டுமல்ல, அந்த உணவை உண்ணுகிற மனிதனுடைய உயிருக்கும், உடல் நலத்திற்கும் பாதுகாப்பாக இருக்கின்ற அந்த சுற்றுச் சூழலை மனதிலே கொண்டு அவருடைய கடைசி காலத்திலே மிகச் சிறப்பாக சுற்றுச் சூழல் பாதுகாப்பை இரசாயன உரங்களாலே--அவர் ஒருமுறை சுற்றுச் சூழல் பாதுகாப்பு கருத்தரங்கத்திலே கலந்துகொண்டு பேசியபோது இரசாயன உரங்களை மிகுதியாகப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று ஒரு காலத்திலே நினைத்தோம், அப்போதெல்லாம் நாம் வெளிநாட்டிடம் உணவுப் பொருட்களுக்காக கையேந்திக் கொண்டிருந்த நிலைமை இருந்தது. ஆனால் இப்போதிருக்கிற சூழ்நிலையை எண்ணிப் பார்க்கிறபோது, அந்த உற்பத்திப் பெருக்கத்தைவிட மனித உயிர்களுடைய மதிப்பு மிகச் சிறந்ததாக இருக்கின்ற காரணத்தினாலே இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகளால் -- வருகின்ற கொடுமைகளிலிருந்து மீண்டு, இயற்கை விவசாயத்தை மேம்படுத்தக்கூடிய அளவுக்கு இந்த நாடு முன்னுக்கு வரவேண்டும் என்று சொல்லி, அவர் ஜப்பானில் இருந்த பொக்காக்கோ என்ற விவசாய அறிஞரை அடியொட்டிய ஒரு மிகச் சிறந்த வழிகாட்டியாக அவர் திகழ்ந்திருக்கிறார். இது எல்லாவற்றையும்விட அவர் வருங்கால சந்ததியினரின் வாழ்வைக் கருத்திலே கொண்டு இப்போது பொது வாழ்விலே இலஞ்சம், ஊழல் மிகுந்து வருவதை, அப்படி ஊழல் செய்கின்றவர்கள் கொஞ்சம்கூட வெட்கமில்லாமல் பொது வாழ்விலே தங்களை [illegible]ர்களாகக் காட்டிக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையெல்லாம் [illegible]

கொள்கிறபோது மிகக் கடுமையாக எந்தவித பாரபட்சமான சிந்தனையுமில்லாமல் இந்த நாடு சிறப்படைய வேண்டும், முன்னேற வேண்டும் என்று சொன்னால் இலஞ்சமும் ஊழலும் தடுக்கப்பட வேண்டும், அதைச் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலே ஆணித்தரமான கருத்தை இளைய சமுதாயத்திற்கு வழிகாட்டுகின்ற வகையிலே எடுத்துக்காட்டிய ஓர் ஒப்பற்ற பெருமகனார் சி.எஸ். அவர்கள். எனவே, அவருடைய மறைவு வெறும் வார்த்தை அளவிலே ஈடு செய்யப்பட முடியாதது என்று சொல்வதைவிட பொது வாழ்விலே இருப்பவருக்கு ஒரு இலக்கணமாகத் திகழ்ந்த அவரை இழந்து வாடுகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் எங்களுடைய தமிழ்ப் பாட்டாளி மக்கள் கழகத்தின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுபெரும் அரசியல் அறிஞர், பாரத ரத்னா சி. சுப்பிரமணியம் அவர்களுடைய மறைவுக்காக இரங்கல் தீர்மானத்தை அவை முன்னவர் பேராசிரியர் அவர்கள் முன்மொழிந்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வழிமொழிந்து, மற்ற கட்சிகளின் தலைவர்களும் ஆழ்ந்த இரங்கலை அவருடைய குடும்பத்தாருக்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவித்திருக்கிறார்கள்.

இன்றைய என்னுடைய மனோ நிலை, உடல் நிலை, இரண்டையும் பொறுத்து இன்று அவைக்கே வர இயலுமா என்ற சூழ்நிலையிலே இருந்தேன். நேற்று இரவு 10-00 மணி முதல் நானும், அமைச்சர்களும், எங்களோடு மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும் விடிய விடிய காலையில் நான்கே முக்கால் மணி வரையிலே அப்பலோ மருத்துவமனையிலே இருந்து காலையிலேதான், விடியற் காலையிலேதான் வீடு திரும்பினோம். அவைக்கு வர இயலாத உடல்நிலை எனக்கு இருந்தாலும்கூட, ஒரு மகத்தான பெரியவருக்கு மரியாதை செலுத்தவேண்டும் என்கின்ற அந்த எண்ணம் உந்தித் தள்ள என்னுடைய கடமையை ஆற்றவேண்டும், ஒரு பெரிய மனிதருக்கு ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றத் தவறினால் அது வாழ்விலே, குறிப்பாக,



பொது வாழ்விலே நாம் செய்த பெரும் பிழையாகும் என்ற அந்த உணர்வோடு இந்த இரங்கல் தீர்மானத்தின் தொடர்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

90 அகவை நிரம்பிய மகத்தான மனிதர் சி.எஸ். அவர்கள் கோவை மாவட்டத்திலே, பொள்ளாச்சிக்கு அருகிலே உள்ள ஒரு சின்னஞ்சிறு கிராமத்திலே பிறந்தவர். சிறிய கிராமத்திலே பிறந்தவர் என்றாலும்கூட, இந்தப் பெரிய நாட்டின் தலைவர்களிலே ஒருவராகத் திகழ்ந்தவர். சட்டப் படிப்பை முடித்து வழக்கறிஞர் தொழிலிலே ஈடுபட்டு இருந்த சி.எஸ். அவர்கள், அண்ணல் காந்தியடிகளுடைய ஒத்துழையாமை இயக்கத்திலே கவரப்பட்டு வழக்கறிஞர் பதவியைப் பொருட்படுத்தாமல் தேசிய இயக்கத்திலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு விடுதலை ஆர்வத்தோடு பல போராட்டங்களில் ஈடுபட்டு தியாகத் தழும்புகளைப் பெற்றவர் மறைந்த சி.எஸ். அவர்கள் ஆவார்கள்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, 1952 ஆம் ஆண்டில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுடைய தலைமையிலே அமைந்த அமைச்சரவையிலும், பின்னர் 1954 ஆம் ஆண்டில் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய தலைமையிலே அமைந்த அமைச்சரவையிலும் நிதியமைச்சராக விளங்கி பெரும் புகழ் பெற்றவர். 1957 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்று, அப்பொழுதும் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய தலைமையிலே இந்த அவையிலே அவர்கள் நிதியமைச்சராக வீற்றிருந்தார்கள். அப்பொழுதுதான் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல நிதிநிலை அறிக்கையை அவர்கள் இங்கே முன்வைத்து, இன்னும் ஒரு 3, 4 கோடி ரூபாய் சேர்ந்திருந்தால் சென்சுரி அடித்திருப்பேன், 100 கோடி ரூபாய் பட்ஜெட்டைக் கொடுத்திருப்பேன் என்று அன்றைக்கு அவர்கள் சொன்னார்கள். 1957 ஆம் ஆண்டு அவர்கள் இந்த அவையிலே அமைச்சராக, நிதியமைச்சராக இருந்தபோது, நானும், பேராசிரியரும் இந்த அவையிலே உறுப்பினர்களாக இருந்தோம். அன்றுதொட்டு அவரை நாங்கள் மிக நன்கு அறிவோம்.

*முற்பகல் 10-25*

1962-ல் நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலிலே அவர்கள் பெருவெற்றி பெற்று, எஃகு மற்றும் சுரங்கத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, பல பெரிய இரும்பு எஃகுத் தொழில்கள் இந்தியாவில்

உருவாவதற்குக் காரணகர்த்தாவாக விளங்கினார்கள். பண்டித நேரு அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, லால் பகதூர் சாஸ்திரி தலைமையில் அமைந்த அமைச்சரவையில் வேளாண் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, இங்கே நண்பர்களெல்லாம் எடுத்துக்காட்டியதைப் போல, வேளாண் துறை விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய துணையோடு இந்தியாவிலே பசுமைப் புரட்சித் திட்டத்திற்கு வித்திட்ட பெருமைக்குரிய திருமகன் மறைந்த சி.எஸ். அவர்கள் ஆவார்கள். அந்த முயற்சியின் காரணமாகத்தான் பற்றாக்குறை நிலைமையிலேயிருந்த நமது நாட்டு உணவு நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சில ஆண்டுகளில் உணவில் தன்னிறைவு அடையக்கூடிய ஒரு சூழ்நிலையை சி.எஸ். அவர்கள் உருவாக்கினார்கள். லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் மறைவுற்றதைத் தொடர்ந்து இந்திரா காந்தி அம்மையார் தலைமையிலே அமைந்த அமைச்சரவையிலும் சி.எஸ். அவர்கள் இடம் பெற்றார்கள். 1974-77 ஆகிய ஆண்டுகளில் இந்தியாவினுடைய நிதியமைச்சராக அவர்கள் விளங்கி, இந்தியாவின் கிராமப்புறப் பகுதிகளிலே வங்கிகள் உருவாவதற்கு வழிவகுத்தார்கள். இன்றைக்கு கிராமப்புற வங்கிகள் எல்லாம் இருக்கின்றன என்றால், அதற்குக் காரணகர்த்தா 1974-77 வரையில் நிதியமைச்சராக அன்றைக்கு இருந்த சி.எஸ். அவர்கள்தான் என்று சொன்னால், அது மிகையாகாது. 1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியிலே ஒரு பிளவு ஏற்பட்டு, காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்த அந்தக் காலகட்டத்தில் சி.எஸ். அவர்கள் அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய ஆதரவாளராக விளங்கினார்கள். ஆனாலும்கூட, இந்திரா காந்தி அவர்கள் Emergency—நெருக்கடி நிலை பிரகடனப்படுத்திய பிறகு அதனால் ஏற்பட்ட விளைவுகளை அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள் என்பது வரலாற்றுக் குறிப்பாகும். அதற்குப் பிறகு 1979 ஆம் ஆண்டில் சரண்சிங் தலைமையிலே அமைந்த அமைச்சரவையில் சிறிது காலம் அவர்கள் பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் விளங்கினார்கள். அதன் பின்னர், தீவிர அரசியலிலிருந்து விலகி இருந்த சி.எஸ். அவர்களை 1992 ஆம் ஆண்டில் மராட்டிய மாநில ஆளுநராக இருக்க வேண்டுமென்று கேட்டு, அவ்வண்ணம் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அங்கேயும் அவர் தன்னுடைய நேர்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய சம்பவம் ஒன்று உண்டு. அப்போது பிரதமர் நரசிம்மராவ் அவர்களைப் பற்றி தனிப்பட்ட முறையிலே அவர் தெரிவித்த ஒரு கருத்தின் காரணமாக,



அந்தக் கருத்து வெளியானதைத் தொடர்ந்து ஆளுநர் அலுவலக மரபை நிலைநாட்டும் வகையில் பதவியிலிருந்து விலகி, சிறந்த ஜனநாயக மரபைக் காத்த அந்தப் பெருமையும் சி.எஸ். அவர்களைச் சாரும்.

'தமிழால் முடியும்' என்ற ஒரு அருமையான புத்தகத்தைத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கியவர் சி.எஸ். அவர்கள். இந்தித் திணிப்பால், இந்தி ஆதிக்கத்தால், ஆங்கிலம் அறவே அகற்றப்படுவதால் தமிழர்கள் இரண்டாம்தரக் குடிமக்களாக ஆக்கப்பட்டுவிடுவார்கள் என்பதற்காக நடைபெற்ற அந்த மாபெரும் கிளர்ச்சியில், அந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவாகவோ அல்லது எதிர்ப்பாகவோ அல்லாமல் அந்தக் கிளர்ச்சியினுடைய காரணத்தை அகில இந்தியாவிலே உள்ள காங்கிரஸ் தலைமை, மத்திய அரசு புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தன்னுடைய பதவியை அழகேசன் அவர்களோடு சேர்ந்து அன்றைக்குத் துறந்த பெருமைக்குரியவர் சி.எஸ். அவர்கள் ஆவார்கள்.

கடைசியாக கடந்த 6, 7 ஆண்டுகளாக அவர்கள் அரசியலில் ஈடுபாடு இல்லாதவராக இருந்தாலும்கூட, ஆன்மீகத் துறை, பொதுத் துறை, பொது வாழ்வுத் துறை, அரசியலிலே ஈடுபட்ட அத்தனை பேருக்கும் அறிவுரை வழங்குகின்ற துறை, இதிலே ஒரு ஆசானாகவே அவர்கள் விளங்கினார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்த 5, 6 ஆண்டு காலத்தில் அவர்கள் எனக்கு எழுதிய கடிதங்கள் எல்லாம் நான் என்றைக்கும் சேமித்து பொக்கிஷமாக வைக்க வேண்டிய கடிதங்களாகும். அந்த அளவிற்கு அறிவுரைகள், குறைகள் இருந்தால் அதனைச் சுட்டிக்காட்டுகின்ற மனப்பான்மை, அந்தக் குறைகளை எப்படி நிவர்த்திக்க வேண்டுமென்ற யோசனை சொல்கின்ற அந்த அறிவுக்கூறு இவை எல்லாம் அடங்கிய கடிதங்கள் ஏராளம் அவர்களால் எனக்கு எழுதப்பட்டிருக்கின்றன. அடிக்கடி அவரைச் சந்தித்து அவருடைய அறிவுரைகளைப் பெறுகின்ற வாய்ப்பை அண்மைக் காலமாக நான் பெற்றிருந்தேன். அந்த வாய்ப்பு இப்போது நழுவிவிட்டது என்கிற பெரு வருத்தத்திற்கிடையே உங்களிடையே நின்றுகொண்டிருக்கின்றேன். அவருடைய புகழ் என்றென்றும் நிலைக்கும், அவருடைய தியாகம் என்றென்றும் இந்தியத் திருநாட்டினுடைய இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்கின்ற அந்த உறுதியோடு அவருடைய குடும்பத்தாருக்கும்,

அவருடைய அருமைத் துணைவியாருக்கும், அவருடைய அருமைச் செல்வனுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமைகின்றேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், மற்ற எல்லாக் கட்சித் தலைவர்கள் தெரிவித்த இரங்கலோடு பேரவையின் சார்பில் என்னுடைய இரங்கலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து சிறிது நேரம் அமைதி காக்குமாறு வேண்டுகிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.)*

மறைந்த பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப் படுகின்றன. பேரவை மீண்டும் நாளை (9-11-2000) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை முற்பகல் 10-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

46. 2000 ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு தனி நடுவர் மன்ற பணி விதிகள் வெளியிட்டது குறித்து வணிக வரிகள் துறையின் 10-7-2000 நாளிட்ட 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு தனி நடுவர் மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1992) 23(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

47. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பணி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்





வழங்கல் துறையின் 4-5-2000 நாளிட்ட அரசாணை (3டி) எண் 16ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

48. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 4-8-2000 நாளிட்ட 168 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

49. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் அட்டவணை-மிமில் சில திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 24-4-2000 நாளிட்ட 71 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

50. 2000 ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களின் நல நிதி விதிகள் உருவாக்குவது குறித்து உள் துறையின் 28-2-2000 நாளிட்ட 222 ஆம் எண் அரசாணை மற்றும் 21-3-2000 நாள் கடித எண் 71039/உள் (நீதிமன்றங்கள்-V/99) ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களின் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1999) 26(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2000 நவம்பர் 8

51. 2000 ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை விதிகள் உருவாக்குவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 26-9-2000 ஆம் நாளிட்ட 446 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

52. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/2000) 1-10-2000 ஆம் நாள் முதல் அமலுக்கு வருகிறது என்பது குறித்த நிதித் (சம்பளங்கள்) துறையின் 26-9-2000 நாளிட்ட 445 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

53. செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் இணை இயக்குநர் (செய்தி) அவர்களை மாநில ஒப்பந்தப் புள்ளிகள் செய்தி வெளியீட்டு அலுவலராகவும் மற்றும் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகத்திலுள்ள மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலரை அந்தந்த மாவட்ட ஒப்பந்தப் புள்ளிகள் செய்தி வெளியீட்டு அலுவலராகவும் நியமிப்பது குறித்த நிதித் (சம்பளங்கள்) துறையின் 26-9-2000 நாளிட்ட 447 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

54. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

55. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான கடலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)



2000 நவம்பர் 8]

56. 1998-99 ஆம் ஆண்டிற்கான விழுப்புரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

57. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான நாமக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

58. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான தருமபுரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

59. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான ஈரோடு மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

60. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

23. 2000-2001 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

24. 2000-2001 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

25. 2000-2001 ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

26. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து ஆறாவது அறிக்கை. (2000-2001)

27. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து ஏழாவது அறிக்கை. (2000-2001)

28. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து எட்டாவது அறிக்கை. (2000-2001)

29. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2000-2001)

30. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூறாவது அறிக்கை. (2000-2001)

31. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

32. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

---

222788

இந்நாளைய நடவடிக்கைக் குறிப்புகள் சட்டமன்றப் பேரவை நிருபர் பிரிவால் கணினி மூலம் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகத்தால் அச்சிடப்பட்டது.

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.